கேரளாவிலும் அரசின் உரையை முழுமையாக படிக்காத ஆளுநர்!

# சட்டப்பேரவையிலேயே தனது எதிர்ப்பை பதிவு செய்த முதலமைச்சர்!

## ஆளுநருக்கு முதல்வர் பினராயி விஜயன் கண்டனம்!



**திருவனந்தபுரம், ஜன. 22 - கேரள சட்டமன்றத்திலும் அம்மாநில அரசு தயாரித்து கொடுத்த உரையை முழுமையாக வாசிக்காமல் ஆளுநர் தவிர்த்துள்ளதற்கு முதலமைச்சர் பினராயி விஜயன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் மூலம் ஒன்றிய அரசு பல்வேறு பிரச்சனைகளை ஏற்படுத்தி வருகிறது. அந்தவகையில், ஒவ்வொரு ஆண்டு தொடக்கத்திலும் சட்டமன்றத்தில் உரையாற்றும் ஆளுநர்கள், மாநில அரசு தயாரித்து கொடுத்த உரையை முழுமையாக வாசிக்காமல், தங்களது சொந்த கருத்துக்களை சேர்த்து உரையாற்றி வருகின்றனர்.

இதற்கு கடும் எதிர்ப்புகளும், கண்டனங்களும் கிளம்பியுள்ளநிலையில், கேரளாவிலும் அம்மாநில அரசு தயாரித்து கொடுத்த உரையை முழுமையாக வாசிக்காமல் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தவிர்த்துள்ளார். இதற்கு முதலமைச்சர் பினராயி விஜயன் சட்டப்பேரவையிலேயே தனது கடும் எதிர்ப்பையும், கண்டனத்தையும் பதிவு செய்தார்.

ஒன்றிய அரசை விமர்சித்துள்ள சில வரிகள் உட்பட பல்வேறு பகுதிகளை தனது உரையிலிருந்து ஆளுநர் தவி ர்த்துள்ளார் என்று அவர் கண்டனம் தெரிவித்துள்ளார். மாநில அமைச்சரவை ஒப்புதல் கொடுத்த உரையை ஆளுநர் முழுமையாக வாசிக்காதது அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது என்று பினராயி விஜயன் குற்றம்சாட்டியுள்ளார்.

உரிய நிதி வழங்காமல் ஒன்றிய அரசு கேரளாவை வஞ்சித்து வருகிறது என்றும், இந்த உண்மையை வாசிப்பதில் ஆளுநருக்கு என்ன தயக்கம் என்றும் பினராயி விஜயன் கேள்வி எழுப்பியுள்ளார். உரையில் ஆளுநர் தவிர்த்த பகுதிகள் அனைத்தும், அவைக்குறிப்பில் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் - கழகத் தலைவர் பிறந்த நாள்!

# இலத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## ஒன்றிய பொறுப்பாளர் கே.எஸ்.ஆர்.கார்த்திகேயன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், ஜன.22 - இலத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொறுப்பாளர் கே.எஸ்.ஆர்.கார்த்திகேயன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இலத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க.செயற்குழுக் கூட்டம் வருகிற 22.1.2026 வியாழன் காலை 9 மணியளவில் கடலூர் காத்தாங்கடை என்.கே.பி. மஹாலில் இலத்தூர் வடக்கு ஒன்றிய அவைத் தலைவர் பி.லோகநாதன் தலைமையில், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழக நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்திற்கு மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், கழக முன்னோடிகள், பி.எல்.ஏ.2, எல்.எல்.சி., பி.டி.ஏ. மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பித்திட வேண்டுகிறேன்.

பொருள்:


1) ஜனவரி 25 நாள் காஞ்சிபுரத்தில் கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் பங்கேற்கும் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம்

2) கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா குறித்து

3) கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு ஒன்றிய பொறுப்பாளர் கே.எஸ் ஆர். கார்த்திகேயன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; ஆர்.என்.ரவி, ஆளுநர் உரையைப் படிக்காமல், அரசமைப்புச்சட்டக் கடமையைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு, சட்டப் பேரவையிலிருந்து வெளியேறி இருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; பூனை, கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டு போகுமோ? மியா,மியா!**

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பிப். 2, 3 தேதிகளில்

# மாமல்லபுரத்தில் உலகளாவிய உச்சி மாநாடு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேட்டி!

சென்னை, ஜன. 22 - முதலமைச்சர் அவர்கள் தலைமையில் உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு பிப்ரவரி 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் பகுதியில் சிறப்பாக நடைபெற உள்ளது என்று சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

அவரது பேட்டி வருமாறு:

தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறையை உலகளவில் முன்னணி முதலீட்டு இலக்காக மாற்றும் நோக்கில், முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சுற்றுலா கொள்கை 2023 அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது. இந்தக் கொள்கை, குறிப்பாக சுற்றுலாத் துறையில் பொது-தனியார் கூட்டாண்மை Public Private Partnership முறையிலான திட்டங்களை செயல்படுத்துவதற்கான வலுவான வழிகாட்டுதல்களையும் ஊக்கங்களையும் வழங்குகிறது.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு 2025-2026 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையில் (Budget Speech), சுற்றுலாத் துறையில் PPP முதலீட்டு திட்டங்களுக்கு கூடுதல் ஊக்கம் வழங்கப்படும் என்றும், தனியார் முதலீடுகளை ஈர்க்க சிறப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. மேலும் சுற்றுலாத் துறையும் ஒரு தொழில்துறைதான் என முதலமைச்சர் அறிவித்தார்கள்.



இந்த இலக்கை நடைமுறைப்படுத்தும் வகையில், தமிழ்நாடு சுற்றுலாத் துறை 2026, மாநிலத்தின் சுற்றுலா முதலீட்டு வாய்ப்புகளை தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் “தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு 2026ல் நடத்த திட்ட மிட்டுள்ளது.

அதன் அடுத்தகட்டமாக, தமிழ்நாட்டின் சுற்றுலாத் துறையில் பெரிய அளவிலான தனியார் முதலீடுகளை ஈர்க்க, PPP திட்டங்களுக்கான புரிந்துணர்வு, கூட்டாண்மை மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்களை உருவாக்க, “தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு மாநாடு 2026” பிப்ரவரி 02 மற்றும் 03, 2026 ஆகிய தேதிகளில் மாமல்லபுரம் (Mamallapuram), செங்கல்பட்டு மாவட்டத்தில் பிரம்மாண்டமாக நடத்தப்பட உள்ளது.

**மாநாட்டின் முக்கிய நோக்கங்கள்**

- சுற்றுலா வணிகத்தில் PPP முதலீட்டு திட்டங்களை ஊக்குவித்தல்
- இந்தியாவின் சிறந்த சுற்றுலா முதலீட்டு தலமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்துதல்
- புதுமையான சுற்றுலா உள்கட்டமைப்பு திட்டங்களை உருவாக்குதல்
- சுற்றுலா இயக்குநர்கள், முதலீட்டாளர்கள், தொழில்துறை பங்குதாரர்களை அரசுடன் ஒரே தளத்தில் இணைத்தல்
- பார்வையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்த புதிய சுற்றுலா தயாரிப்புகளை உருவாக்க தனியார் துறையை ஊக்குவித்தல்

கவனம் செலுத்தப்படும் முக்கிய துறைகள்:

- சுற்றுச்சூழல் (Eco) சுற்றுலா மையங்கள்
- கடலோர & கப்பல் சுற்றுலா உள்கட்டமைப்பு
- தீம் & சாகச பூங்காக்கள்
- நல்வாழ்வு சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா பாதைகள்
- MICE (Meetings, Incentives, Conferences, Exhibitions) சுற்றுலா
- புதுமையான சுற்றுலா தயாரிப்புகள் மற்றும் தனித்துவ அனுபவங்கள்

பங்குதாரர்களுக்கான சிறப்பு அம்சங்கள்:

- B2B முதலீட்டாளர் சந்திப்புகள்
- கொள்கை விளக்க அமர்வுகள்
- தொழில்துறை தலைவர்களுடன் நேரடி விவாதங்கள்
- கூட்டு முதலீட்டு ஒப்பந்தங்களை விரைவு படுத்தும் வசதி மையங்கள் எதிர்பார்க்கப்படும் பயன்கள்:
- சுற்றுலா துறையில் சர்வதேச தரத்திலான உள்கட்டமைப்பு
- புதிய முதலீட்டு வாய்ப்புகள் உருவாக்கம்
- சுற்றுலா வளர்ச்சியில் வலுவான PPP கூட்டா ண்மைகள்
- தமிழ்நாடு சுற்றுலா பிராண்டுக்கு மேம்பட்ட உலகளாவிய பார்வை
- வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்களிப்பு

தமிழ்நாடு சுற்றுலா துறை, மாநிலத்தின் சுற்றுலா வளங்கள், பண்பாட்டு பெருமை மற்றும் முதலீட்டு சாத்தியங்களை உலகிற்கு வெளிப்படுத்தும் இந்த மாநாட்டில் முதலீட்டாளர்கள், சுற்றுலா நிறுவனங்கள், தொழில்துறை பங்குதாரர்கள் அனைவரும் பங்கு பெற உள்ளனர்.

மேலும் சிப்காட் வாயிலாக சுற்றுலா வளர்ச்சிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி ராஜா அவர்கள், பல்வேறு மாவட்டங்களில் இடங்களை அடையாளம் கண்டு சுற்றுலாத்துறைக்கு வழங்க முயற்சி எடுத்துள்ளார்.

இவ்வாறு அமைச்சர் இரா.இராஜேந்திரன் செய்தியாளர்களிடையே தெரிவித்தார்.




கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பாப்பநாயக்கன்பாளையம் பகுதி கழகத்தின் சார்பில் நடைபெற்ற திராவிடப் பொங்கல் 2026 கோலப் போட்டியை மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் துவக்கி வைத்தார். இதில் பகுதி கழக பொறுப்பாளர் மா.நாகராஜ், வட்ட கழகச் செயலாளர்கள் ஜெபமலை தாஸ், சசிகுமார் உள்பட கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

8 லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு மறுக்கப்பட்டு வரும்

# நிதி சார்ந்த நீதியை ஒன்றிய அரசு உடனே வழங்க முன்வர வேண்டும்!

## பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் தொழிற்சங்கக் கட்டமைப்பு வலியுறுத்தல்!

திருவாரூர், ஜன.22 - எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு கடந்த 18 ஆண்டுகளாக மறுக்கப்பட்டு வரும் நிதி சார்ந்த நீதியை தாமதமின்றி வழங்க இந்திய அரசும் வங்கி நிர்வாகங்களும் முன் வரவேண்டும் என்று பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் தொழிற்சங்க தலைவர்களின் கட்டமைப்பு வலியுறுத்துகிறது.

கடந்த 2008-ஆம் ஆண்டு வங்கித்துறை ஓய்வூதியர்கள் மத்தியில் சம நீதி வேண்டி உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட எம்.சி.சுக்லா வழக்கில் 18 ஆண்டுளைக் கடந்த பின்னரும் வெளிப்படுத்தப்படும் அதீத காலதாமதம் எட்டு லட்சம் வங்கி ஓய்வுதியர்கள் மத்தியில் கலக்கத்தையும் கவலையையும் உருவாக்கி உள்ளது. வாழ்நாள் முழுமையும் பொதுத்துறை வங்கிகளின் வளர்ச்சிக்காகவும், நாட்டின் நலனுக்காகவும், அர்ப்பணித்துக் கொண்டு உழைத்த வங்கி ஓய்வுதியர்கள் சமூகக் கழிவாக (Social Waste) கருதப்பட்டு விடக்கூடாது.

ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா, நபார்டு மற்றும் மத்திய மாநில அரசின் ஓய்வூதியர்களுக்கு ஒவ்வொரு ஊதிய ஒப்பந்தத்தின் போதும் ஓய்வூதியம் சீரமைக்கப்பட்டு (PENSION UPDATION) வழங்கப்பட்டு வருகிறது.

வங்கித்துறையில் கணிசமான அளவு ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வுதிய சீரமைப்பை எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு மறுப்பது அரசியலமைப்பின் 14வது பிரிவுக்கு எதிரானது (UNEQUAL TREATMENT TO EQUALS) என்ற கருத்தை அரசும், வங்கி நிர்வாகங்களும் சீர்தூக்கி பார்க்க வேண்டும்.

பொதுத்துறை வங்கிகளின் பென்சன் கையிருப்பு ஏறத்தாழ 4,56,424 கோடி இருக்கும் போது ஓய்வூதிய சீரமைப்பை எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கும் தாமதமின்றி வழங்க முன்வர வேண்டும்.

கடந்த 2024 ஆண்டு மார்ச் மாதம் வங்கித்துறையில் கையெழுத்தான இருதரப்பு ஊதிய ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்ட ExGralia கடந்த இரண்டு ஆண்டுகளாக பரிசீலனை செய்து உயர்த்தி வழங்காத வரலாற்று அநீதியை தாமதமின்றி களைய வேண்டும். கடந்த 1997க்கு முன்னர் ஓய்வு பெற்றோருக்கு அளிக்கப்பட்டு வரும் சொற்ப ஓய்வுதியமும், 2002-ஆம் ஆண்டுக்கு முன்னர், ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பஞ்சப்படியில் உள்ள பாதகமான முரண்பாடு களையும் தாமதமின்றி களைய அரசும் வங்கி நிர்வா கங்களும் முன் வர வேண்டும்.

விண்ணை முட்டும் விலைவாசி, மலைக்க வைக்கும் மருந்துகளின் விலை, அச்சத்தை ஊட்டும் சிகிச்சை செலவுகள், நாளும் உயர்ந்து வரும் நோய்களின் எண்ணிக்கை ஆகியவற்றை தளர்ந்த உடலோடு தள்ளாத வயதில் எதிர்கொள்ள முடியாமல் நிலை குலைந்து நிற்கும் அறிவார்ந்த மூத்த தலைமுறையினருக்கு நிதி சார்ந்த நீதியை வழங்கி வங்கித்துறையில் மறுமலர்ச்சியையும், நாட்டு மக்களின் நல்லெண்ணத்தையும் பெற இந்திய அரசும், இந்திய வங்கிகள் நிர்வாகமும் முன்வரவேண்டுமென பாரத ஸ்டேட் பேங்கின் முன்னாள் தொழிற்சங்க தலைவர்களின் கட்டமைப்பு (AFCCOM) வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அந்தச் சங்கம் சார்பில் எஸ்.பி. இராமன் (தலைவர்), எம். கே.மூர்த்தி (செயலாளர்) ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தி உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 2025–26 ஆம் கல்வியாண்டிற்கு, செங்கல்பட்டு மாவட்டம், செய்யூரில் புதிதாக தொடங்க அறிவிக்கப்பட்டு, இயங்கிவரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் நேற்று முன்தினம் (20.01.2026) திடீர் ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின் போது, சட்டமன்ற உறுப்பினர் பனையூர் மு.பாபு, கல்லூரி முதல்வர் (பொ) முனைவர் எஸ். மாதவன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வருவாய்த்துறை, கூட்டுறவுத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நீர்வளத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்களுடன் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் பிரபு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மகாராஜ், வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின்கீழ் 1.30 கோடி மகளிர்க்கு உரிமைத் தொகை!

## ஆளுநர் உரை – பேரவைத் தலைவர் வாசித்தார் ! 6 ஆம் பக்கத் தொடர்ச்சி

சிக்கல்களுக்குத் தீர்வு காணப்பட்டு, குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுடைய மக்கள் பயனடையும் வகையில் 1.42 இலட்சம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கு நிரந்தர வீட்டு வசதி, சம நிலஉரிமை மற்றும் அவர்களின் மாண்பை உறுதி செய்யும் விதமாக, இந்த அரசு மாநிலம் முழுவதும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் உட்பட விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு, கடந்த மே 2021 முதல் டிசம்பர் 2025 வரை 22.71 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியுள்ளது. இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிப்பவர்களின் வாழ்வு வளம்பெற 6,311 புதிய வீடுகள் 391 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் 2,742 வீடுகள் 197 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

36. இந்திய அளவில் விரைவாக நகரமயமாகும் மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மையானது. பல்வேறு சவால்களையும் வாய்ப்புகளையும் இந்த நகரமயமாதல் உருவாக்குகிறது. எனவே, நகர்ப்புற உட்கட்டமைப்பு, குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை, போக்குவரத்து, வீட்டுவசதி, சுற்றுச்சூழல் பேணுதல் ஆகியவற்றுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து அவற்றிற்கான திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்துவது அவசியமாகிறது.

### பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க 87 குடிநீர்த் திட்டங்கள்!

37. தமிழ்நாடெங்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் 87 குடிநீர்த் திட்டங்கள் 15,591 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு, ஒரு கோடியே 65 இலட்சம் மக்கள் பயனடைந்து வருகின்றனர். சென்னை பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரியத்தின் சார்பில், முதல் முறையாக நாளொன்றுக்கு கடந்த 43 ஆண்டுகளில் சராசரியாக 1,000 மில்லியன் லிட்டர் குடிநீர் 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் விநியோகிக்கப்பட்டு வருகிறது. பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை மேலும் நிறைவு செய்திட, கோவளம் வடிநிலப் பகுதியில் 342 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **மாமல்லன் நீர்த்தேக்கத்தினை** அமைப்பதற்கான பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியுள்ளார். இதன் மூலம் நாளொன்றுக்கு 170 மில்லியன் லிட்டர் குடிநீர் கூடுதலாக விநியோகிக்க முடியும்.

38. **‘கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்’** கீழ் ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2,504 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,649 எண்ணிக்கையிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் தெரு விளக்குகள், சாலை மேம்பாடு சமுதாயக் கூடங்கள், சந்தைகள், நூலகங்கள், பூங்காக்கள், எரிவாயு தகன மேடைகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்எப்பட்டு வருகின்றன.

### தூய்மைப் பணியாளர்களைத் தொழில் முனைவோராக மாற்றும் திட்டம்!

39. **‘நமக்கு நாமே திட்டத்தின்’** கீழ், கடந்த ஐந்து ஆண்டுகளில் 575 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுமக்கள் பங்களிப்புடன் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகளவில் பயன்பெறும் வகையில், பொதுமக்கள் பங்களிப்புத் தொகை மொத்த மதிப்பீட்டில் ஐந்தில் ஒரு பகுதியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. **தூய்மைப் பணியாளர்களைத் தொழில் முனைவோராக மாற்றும் திட்டத்தின் கீழ்**, அவர்களின் சமூக – பொருளாதார மேம்பாட்டுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 5 ஆண்டுகளில் 6,871 புதிய பேருந்துகள்!

40. பொதுப் போக்குவரத்தினை மேம்படுத்திடும் வகையில் கடந்த ஐந்து

## விளையாட்டு வீரர்களின் திறனை மேம்படுத்த நடவடிக்கைகள்!

ஆண்டுகளில் மட்டும் 6,871 புதிய பேருந்துகள் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், 5,216 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. இதுமட்டுமன்றி, 3,673 பேருந்துகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. காற்று மாசுபடுவதையும் கார்பன் தடங்களையும் குறைத்திடும் முன்முயற்சியாக, தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக 380 மின் பேருந்துகள் 288 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

### கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை!

41. சமூகநீதி நோக்குடன் மக்கள் நலம் நாடும் அரசாகச் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு, மக்களின் நல்வாழ்வை

## 5,58 லட்சம் மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித் தொகை!

உறுதிப்படுத்துவதில் சிறப்புக் கவனம் செலுத்திவருகிறது. சென்னை கிண்டியில் தொடங்கப்பட்டுள்ள **கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை**, ஆயிரம் படுக்கைகள், 15 அறுவை சிகிச்சை அரங்குகளுடன், சென்னையின் அடையாளங்களில் ஒன்றாக மாறியுள்ளது. மேலும், காஞ்சிபுரம் மாவட்டம் காரப்பேட்டையில் உள்ள அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையானது 750 படுக்கை வசதிகளுடன் 6.66 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் ஒரு ஒப்புயர்வு மையமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

### விபத்தால் பாதிக்கப்பட்ட நான்கு இலட்சம் பேர் நலம் பெற்றுள்ளனர்!

42. மக்கள் நலம் காக்கும், உயிர் காக்கும் இவ்வரசின் பல திட்டங்கள் பாராட்டுக்குரியவை. **முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில்**, பயனாளிகளுக்கான ஆண்டு வருமானம் 1.2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு, 5 இலட்சம் ரூபாய் வரையில் மருத்துவக் காப்பீடு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2,053 சிகிச்சை முறைகள் அங்கீகரிக்கப்பட்டு, கடந்த ஐந்து ஆண்டுகளில் 6,769 கோடி ரூபாய் மதிப்பிலான காப்பீட்டுத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் 1.45 கோடி குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன. **‘இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48’** திட்டத்தின் மூலம். விபத்தால் பாதிக்கப்பட்ட நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் நலம் பெற்றுள்ளனர்.

43. நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் எனும் வள்ளுவத்தின் வழிகாட்டலின்படி செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது. **மக்களைத் தேடி மருத்துவம்** திட்டத்தின் கீழ் 2.51 கோடி பயனாளிகள் முதன்முறை சேவைகளைப் பெற்றுள்ளனர். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பெண் சுகாதார தன்னார்வலர்கள் மூலம் அவர்களுக்கு தொடர் கவனிப்பும் அளிக்கப்பட்டு வருகிறது. நோய்களை தொடக்க நிலையிலேயே கண்டறிந்து, உரிய நேரத்தில் சிகிச்சை எடுக்க உதவும் நோக்கில் தொடங்கப்பட்ட **‘ நலம் காக்கும் ஸ்டாலின்’** திட்டத்தின் கீழ், தமிழ்நாடு முழுவதும் 986 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, இதன் மூலம் 15 இலட்சத்திற்கும் மேலான மக்கள் உயர்சிறப்பு மருத்துவச் சேவைகளைப் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

44. குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவரின் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்தி. கடைக்கோடித் தமிழரின் முகங்களிலும் புன்னகையை மலரச் செய்திடும் நோக்கில் சமத்துவ சமூகநீதிக் கொள்கைகளை கடைப்பிடித்து வரும்நமது அரசு மாற்றுத்திறனாளிகளின் நலன் காத்திட பல்வேறு புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறது.

45. மாற்றுத் திறன் கொண்டோரை மாற்றுத்திறனாளி என்னும் கண்ணியமான சொல்லால் குறிப்பிட வேண்டும் என்பதை அறிவுறுத்தியதுடன் மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகப்படுத்திய முத்தமிழறிஞர் கலைஞரின் வழியில் நடைபோடும் இந்த அரசு, மாற்றுத்திறன் கொண்டோரின் குறைபாடுகளை தொடக்க நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை மற்றும் திறன் பயிற்சி அளிப்பதன் மூலம். அவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் திட்டத்தினை (TN-RIGHTS) செயல்படுத்தி வருகிறது. மாற்றுத் திறனாளிகளுக்குச் சுயதொழில் தொடங்க கடனுதவி வழங்கப்படுகிறது. முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்கள், அறிவுசார் குறைபாடுடையோர், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்காகச் சிறப்பு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.

### 2.58 இலட்சம் பேருக்கு பராமரிப்புத் தொகை!

46. மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் மகுடம் சூட்டும் வகையில், தமிழ்நாட்டின் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளை நியமன முறையில் உறுப்பினராக்கும் வகையில் இந்த அரசு சட்டத் திருத்தம் மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் 3,631 மாற்றுத்திறனாளிகள், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உறுப்பினர்களாகி, தமிழ்நாட்டின் வளர்ச்சியை வடிவமைத்திடும் அரிய வாய்ப்பைப் பெற்றுள்ளனர். **‘எல்லோருக்கும் எல்லாம்’** என்பதே இந்த அரசின் உயிர்நாடி என்பதை இந்நடவடிக்கை அழுத்தந்திருத்தமாக வெளிப்படுத்தியுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகையினை இந்த அரசு ஆயிரம் ரூபாயிலிருந்து ஆயிரத்து ஐநூறு ரூபாயாக அதிகரித்துள்ளது. இதன் மூலம். 5.88 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர். மேலும், கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் மாதாந்திர பராமரிப்புத் தொகையினை ஆயிரத்து ஐநூறு ரூபாயிலிருந்து இரண்டாயிரம் ரூபாயாக நமது அரசு உயர்த்தியுள்ளது. இதன் மூலம் 2.58 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

47. தொழிற்துறையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 12.16 இலட்சம் கோடி ரூபாய்க்கும் மேலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, மாநிலமெங்கும் தொழிற் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களுடன் இதுவரை 1176 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை சுமார் 36 இலட்சம். 2025 ஆம் ஆண்டில் மட்டும் 14.65 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான மின்னணுவியல் பொருட்கள் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. தேசிய அளவிலான மின்னணுவியல் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 41.2 சதவீதமாக உயர்ந்து சாதனை படைத்துள்ளது.

### மாவட்டங்கள் தோறும் டைடல் பூங்காக்கள்!

48. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில், சென்னையில் கடந்த 2000 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட டைடல் பூங்கா, தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாட்டிற்கான உயரிய இடத்தை உறுதி செய்தது. அதே வழியில் இந்த அரசு, திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில் ஒரு டைடல் பூங்காவையும், தஞ்சாவூர். சேலம், விழுப்புரம், தூத்துக்குடி. வேலூர். திருப்பூர் ஆகிய இடங்களில் மினி டைடல் பூங்காக்களையும் நிறுவியுள்ளது.

மேலும், மதுரை, திருச்சி, ஓசூர். காரைக்குடி, விருதுநகர். திருநெல்வேலி. கன்னியாகுமரி, ஈரோடு. நாமக்கல், திருவண்ணாமலை, கரூர், உதகமண்டலம், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் புதிய டைடல் மற்றும் மினி டைடல் பூங்காக்கள் நிறுவப்பட உள்ளன. இதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் இத்தொழில் பரவி. நம் மாநிலம் சமச்சீரான வளர்ச்சியை எட்டும் நிலை உருவாகியுள்ளது.

49. சென்னையில் 83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிதி நுட்ப நகரம் (Fin Tech City) ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. தொழில்துறையை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை என 18 புதிய துறைசார் கொள்கைகளை இந்த அரசு வெளியிட்டுள்ளது.

### உலக புத்தொழில் மாநாடு – தொழிற்பயிற்சி முகாம்கள்!

50. தமிழ்நாட்டில் சுமார் 40 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை மாநிலத்தின் மொத்த தொழிற்சாலை உற்பத்தியில் மிக முக்கியப் பங்கினை வகிக்கின்றன. தமிழ்நாடு வர்த்தக வரவுகள் தள்ளுபடி முறை எனும் திட்டம். கலைஞர் கைவினைத் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் மூலம் குறு. சிறு நடுத்தரத் தொழில்களை ஊக்குவிக்கும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கையும் வெளியிடப்பட்டுள்ளது. உலக புத்தொழில் மாநாடு, தொழிற்பயிற்சி முகாம்கள் எனப் பல முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

51. தமிழ்நாட்டில் உயர்ந்து வரும் மின்தேவையை நிறைவு செய்திடும் நோக்கில் உடன்குடி மற்றும் எண்ணூர் அனல்மின் நிலையங்களில் 2,640 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட புதிய அலகுகள் அமைக்கும் பணிகள் நிறைவுபெறும் தருவாயில் உள்ளன. மேலும், 520 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட புனல் மின் நிலையங்கள், மின்கலன் சேமிப்பு அமைப்புகள் மற்றும் நீரேற்று மின் திட்டங்கள் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், எண்ணூர் அனல்மின் நிலைய விரிவாக்கத் திட்டம். உடன்குடி அனல் மின் திட்டம் நிலை II மற்றும் III மற்றும் தூத்துக்குடி அனல் மின் திட்டம் விரிவாக்கம் ஆகியவையும் செயல்படுத்தப்பட உள்ளன. இவற்றின் மூலம் வரும் ஆண்டுகளில் தமிழ்நாட்டின் மின் உற்பத்தித் திறன் 7.000 மெகா வாட்டிற்கும் அதிகமாக உயரும். இது மாநிலத்தின் தொழில் துறை வளர்ச்சிக்குப் பேருதவியாக அமையப்பெறும்.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்

## இந்தியாவிலேயே முதன் முறையாக ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’ அறிமுகம்!